**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO-122/2025**
**Dated :11.05.2026**
**Deposition of witness for : P.W.2**

**List of Witness LW2 Examined as PW2 (Victim)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமச்சந்திரன் | வயது | : | 65 |
| தந்தை பெயர் | : | சின்னையா | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | மருங்கூரணி | தொழில் | : | **வேலை எதுவும் செய்யவில்லை** |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

( எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வேலை எதுவும் செய்யவில்லை. ஆஜர் எதிரி எனது மகன் ஆவார். அ.சா.1 எனது மனைவி ஆவார். கடந்த 2025 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 23 ஆம் தேதி இரவு சுமார் 8.30 மணியளவில் நான் எனது வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்தேன். ஆஜர் எதிரியும் எனது மூத்த மகன் ரெங்கநாதனும் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது, எனது மகன் முத்துகுமாரை சாப்பிட கூப்பிட்டேன். அதற்கு, முத்துகுமார் உன்னை ஒழித்தால் தான் சரியாக வரும் என்று சொல்லி, கத்தியால் எனது கழுத்தை அறுத்துவிட்டார். என்னை தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கு சுமார் 13 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் எனக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 65 வயது இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதி இரவு சுமார் 9.00 மணி இருக்கும் என்றால் சுமார் 8.40 மணி இருக்கும். எனது மகன் என்னை தாக்கியது சம்மந்தமாக நான் கந்தர்வகோட்டை காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் வைத்து தான் விசாரித்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியிலும் எனக்கு கண்பார்வை சரியாக தெரியாது என்றால் சரிதான். அன்றைய தினம் எனது கழுத்தை அறுத்தது யார் என்று எனக்கு தெரியாது என்றால்

சரியல்ல. எனது கழுத்தை பிடித்து உன்னை இத்தோடு ஒழித்து விடுவேன் என சொன்னதால் குரலை வைத்து எனக்கு தெரிந்தது. நான் ஊர்காரர் முன்பாக நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் அடைந்து கைரேகை வைத்தேன் என்றால் சரிதான். எதற்காக வைத்தேன் என்று தெரியவில்லை.

எனக்கு கண்பார்வை தெரியாது. கைரேகை வைத்த பொழுது நானும் எனது மகனும் சமாதானமாக போவதாக நான் சொன்னேன் என்றால் சரியல்ல. சமாதானமாக போவதாக நான் சொல்லவில்லை. சம்பவத்தின் போது நானும் குடித்து இருந்தேன் என்றால் இல்லை. நான் சொல்வது போல, சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் தான் நான் சமாதானமாகி சமாதான மனுவில் கையொப்பம் செய்தேன் என்றாலும் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.05.11 15:43:00 +0530

**நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**